25th March 1960]

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அவர்கள் அப்படி தான் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த வேலைகளை அவர்கள் சரியாக நடத்துகிறார்களா என்பதை கண்காணிக்க சீப் இஞ்சினியரை அதற்கு மேல மேற்பார்வை செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware that the people who remove these tramway lines are expected to repair that portion of the road where the lines were already removed, and that people who use the roads are put to lot of difficulties on account of the ups and downs there? What action do the Government propose to take to lay the entire road evenly without causing inconvenience to wheeled traffic?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : They are asked to repair the roads as they take out the tramway lines. Repair is done sector by sector, according to the information received by me. After they clear the major roads of the rails and repair them, they go to the next sector.

SRI A. A. RASHEED : Can the Hon. Minister give a time-limit within which the roads already dug up will be completely repaired and made fit for traffic?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : I have to consult the Chief Engineer to give an answer. If I am given some time, I can answer that question.

Subsidy for Fish Markets.

* 570 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ஸ்தலஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா: —

(அ) இம்மாநிலத்தில் மீன்கடைகளை விஸ்தரிப்பதற்காக மான்யம் வழங்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) எத்தனை ரூபாய், எந்தெந்த ஸ்தாபனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது ?

(இ) இந்த விஸ்தரிப்பு வேலை எந்த அடிப்படையில் நடந்து வருகிறது ?

(ஈ) இத்திட்டத்தை மேலும் விஸ்தரிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ? அதன் விபரம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) A statement is placed on the table of the House.

(*d*) This scheme will be continued till the end of the Second Five-Year Plan and in the light of the experience gained, the question of continuing it and also taking up the construction of some Model Fish Markets in the important cities of this State under the Third Five-Year Plan will be considered in due course.

* Printed as Appendix II on pages 623–624 infra.

[25th March 1960

SRI A. VEDARATHNAM : மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற ஏடுகளில் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம் சில முனிசிபாலிட்டிகளுக்கு அதாவது ஸ்ரீரெங்கம், ஆர்காடு போன்ற முனிசிபாலிட்டிகளுக்கு மிகக் குறைவாகவும் சென்னை நகரத்தைவிட விருதுநகர் முனிசிபாலிட்டிக்கு தொகை அதிகமாகவும் அதாவது ரூ. 12,000 கொடுத்திருப்பதற்குக் காரணம் என்ன ? எந்த அடிப்படையில் முனிசிபாலிட்டிகளுக்கு தொகை ஒதுக்கப்படுகிறது என்பதை தெளிவாக விளக்க முடியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : எந்தெந்த இடங்களில் தேவை அதிகமாக இருக்கிறதோ அந்தந்த இடங்களில் அந்த மார்க்கெட் சரியாக நடக்க வேண்டியதாக இருப்பதால் அங்குள்ள நிலைமையைப் பொறுத்து தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் காரணம். எந்தெந்த இடங்களில் அந்த மார்க்கெட்டை விரிவாக அமைக்க வேண்டுமோ அங்கேயெல்லாம் விரிவாக அமைக்க வேண்டும் என்று அதிகப்படியான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள வேலையைப் பொறுத்துதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI V. SANKARAN : எங்கு சத்தமாகவும், இரைச்சலாகவும் இருக்கிறதோ அங்கேயெல்லாம் "பிஷ் மார்க்கெட்" மாதிரி இருக்கிறதே என்று சொல்வதுண்டு. எந்த ஊர்களில் நடுவில் இந்த மார்க்கெட்டுகளை அமைப்பதால் அங்கு சத்தமும் இரைச்சலும் நாற்றமும் அதிகமாக ஏற்பட வசதியாகிறது. ஆகவே அப்படி நகரங்களுக்கு நடுவில் பிஷ் மார்க்கெட்டை விஸ்தரிப்பதற்கு பதிலாக அதை குறுக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOWRDHAMMAL SIMON : அவைகளுக்கு அதிகமாக உதவி அளிக்க வேண்டும் என்பதற்காகவும் மீன் கூடைகளை கட்டி அவைகளை நல்ல முறையில் வைத்துக்கொள்வதற்காகவும் அரசாங்கம் உதவி செய்ய முன் வருகிறது. அவற்றில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக நல்ல முறையில் கடைகளை அமைத்து உதவி அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் மீன் கடைகளைக் கட்டிக் கொடுக்கிறார்கள்.

SRI A. VEDARATHNAM : கிராம கூட்டுறவு சங்கங்களுக்கு மீன் பிடிக்கும் உரிமையை வழங்குவதாக இப்பொழுது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் அநேகமாக எல்லா மீன் பிடிக்கும் உரிமைகளையும் ஒரே தனிப்பட்ட சங்கத்திற்கு வழங்கப் பட்டிருக்கிறது, அதனால் மீனவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று அரசாங்கத்திற்கு நிரம்ப புகார்கள் வந்திருக்கிறதா ? அப்படி ஒரே சங்கம் எடுத்துக்கொண்டிருப்பதால் ஒரு தனிப்பட்ட நபர் ஏராளமான தொகை சம்பாதித்து வருகிறார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே கடலோரங்களில் கிராம சங்கங்களுக்கு இந்த மீன் பிடிக்கும் உரிமையை வழங்குவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : உரிமையைப்பற்றி பேசுவதற்கு இப்பொழுது இங்கு இடம் இல்லை. கேட்ட கேள்வி மீன் பிடிப்பவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதைப்பற்றியது, அதற்கு பதில் சொல்லியாகிவிட்டது. இப்பொழுது கேட்கப்படுகிற கேள்விக்கு கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI K. VINAYAGAM : There is something fishy.

MR. SPEAKER : That was once upon a time. Now it can never be fishy.